**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 24.06.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

பயங்கரவாதத்தை இந்தியா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது என்று, ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு உணர்த்தி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெய்பிரகாஷ் நாராயண் போன்ற தலைவர்களின் வாழ்க்கையில் இருந்து இளைஞர்கள் ஊக்கம் பெற வேண்டும் என்று குடியரசுத் துணைத தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

எமர்ஜென்சி காலத்தை நினைவு கூறும் அரசியல் அமைப்பு படுகொலை தினம் நாளை அனுசரிக்கப் படுகிறது.

புதுச்சேரி இளங்கோ அடிகள் அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்கள், பாலியல் விழிப்புணர்வு குறித்த பொம்மைகளை தயாரித்துள்ளனர்.

-------------------------

***பிரதமர் 1 (17)***

பயங்கரவாதத்தை இந்தியா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது என்ற இந்தியாவின் கொள்கையை, ஆபரேஷன் சிந்தூர் உலகளாவிய செய்தியாக உணர்த்தி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்திய மக்களை துன்புறுத்துபவர்களுக்கு, எந்த இடமும் பாதுகாப்பானது இல்லை என்பதையும் இந்தியா தெளிவுபடுத்தி உள்ளதாகவும், பிரதமர் கூறியுள்ளார். ஆன்மிக மற்றும் நீதி நேர்மைக்கு

எடுத்துக் காட்டாக திகழ்ந்த 2 முக்கிய தலைவர்களான மகாத்மா காந்தி மற்றும் ஸ்ரீநாராயண குரு ஆகியோர் இடையே நடைபெற்ற, வரலாற்று சிறப்பு மிக்க கலந்துரையாடலின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி இன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்ட பிரதமர், வெளிநாட்டு ஆயுதங்கள் இறக்குமதியை சார்ந்திருந்த இந்தியாவின் நிலை தற்போது மாறி உள்ளதாகவும், பாதுகாப்புத் துறையில், நாடு தற்போது தன்னிறைவை எட்டி உள்ளதாகவும் குறிப்பிட்டார். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை கொண்டு, எதிரிகளை வெறும் 22 நிமிடங்களிலேயே சரணடைய செய்த இந்திய ஆயுதப் படையின் வெற்றிக்கு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையே சிறந்த ஆதாரம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

***பிரதமர்*** 2 (7)

ஸ்ரீநாராயண குரு மற்றும் மகாத்மா காந்திக்கு இடையே, 100 ஆண்டுகளுக்கு முன்பு சிவகரி மடத்தில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க கலந்துரையாடல், நாட்டு விடுதலைக்கு சிறந்த வழிகாட்டுதலாக இருந்ததோடு, வளர்ச்சி அடைந்த பாரதத்தை நோக்கிய பயணத்திற்கு தொடர்ந்து ஊக்கமளிப்பதாகவும் தெரிவித்தார். நாடு சவால்களை எதிர்கொண்ட போதெல்லாம், தொலை நோக்கு எண்ணங்கள் கொண்ட தலைவர்கள், நாட்டின் முன்னேற்றத்திற்கான வழிகாட்டியாக திகழ்ந்தனர் என்றும் பிரதமர் கூறினார்.

-------------------------

***ஜக்தீப் தன்கர்-பீகார்*** 1 (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசால், கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் பொருளாதாரம் அதிவேக வளர்ச்சி கண்டு, கட்டமைப்புகளின் மேம்பாடு தனித்துவம் மிக்கதாக மாறி, சரித்திரம் படைத்துள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார். இன்று பீகார் மாநிலம் முசாப்ஃபர்பூரில், நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது இவ்வாறு குறிப்பிட்ட திரு. தன்கர், உலகின் 11ஆவது இடத்தில் இருந்த இந்தியப் பொருளாதாரம், அதிவேகமாக வளர்ந்து, 4ஆவது இடத்தை எட்டி உள்ளது என்றும் குறிப்பிட்டார். முன் எப்போதும் இல்லாத அளவில், இளைஞர்களுக்கான வசதி வாய்ப்புகள் தற்போது அதிகரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் அறிமுகம் செய்யப் பட்டுள்ள புதிய கல்விக் கொள்கை, தேசக் கட்டமைப்பு, நற்பன்பு கட்டமைப்பு உள்ளிட்ட தத்துவங்களை ஊக்குவிப்பதாகவும் பாராட்டினார். தமது உரையின் போது, ஜனநாயக மாண்புகளின் முக்கியத்துவத்தையும் திரு. ஜெக்தீப் தன்கர், மக்களுக்கு நினைவு கூர்ந்தார். எமர்ஜென்சி காலகட்டத்தின் போது, ஜனநாயக உரிமைகளுக்காக குரல் கொடுத்த லோக் நாயக் ஜெய்பிரகாஷ் நாராயண் உள்ளிட்ட தலைவர்களின் வாழ்க்கையில் இருந்து இளைஞர்கள் ஊக்கம் பெற வேண்டும் என்றும், குடியரசுத் துணைத் தலைவர் கூறினார்.

-----------------------

***அரசியலமைப்பு படுகொலை*** 1 (10)

நாளை ஜூன் 25ஆம் தேதி, அரசியல் அமைப்பு படுகொலை தினமாக அனுசரிக்கப் படுகிறது. இந்த தினம், 1975ஆம் ஆண்டு, ஜூன் 25ஆம்

தேதி, இந்திய அரசியல் அமைப்பு நசுக்கப்பட்ட சம்பவத்தை நினைவு கூறுகிறது. மேலும், இந்திய வரலாற்றின் கருப்பு காலமாக கருதப்படும் அவசர நிலையின் போது பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் மரியாதை செய்யும் தினமாகவும், 1975 எமர்ஜென்சி காலத்தின் மனித நேயமற்ற கொடுமைகளை சகித்துக் கொண்ட அர்ப்பணிப்பாளர்களை நினைவு கூறும் தினமாகவும் கருதப்படுகிறது. இனி ஆண்டுதோறும் ஜூன் 25ஆம் தேதி, அரசியல் சாசன படுகொலை தினமாக அனுசரிக்கப்படும் என்று, மத்திய அரசு சென்ற வருடம் அறிவித்தது. இது பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*அரசியலமைப்பு படுகொலை 2 (18)*

**(வாய்ஸ்)**

<u>1975ஆம் ஆண்டு, ஜூன் 25ஆம் தேதி, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, நாட்டில், அவசர நிலையை பிரகடனப் படுத்தினார். அவசர நிலை என்னும் எமர்ஜென்சி காலம் 18 மாதங்கள் அமலில் இருந்தது. அக்கால கட்டத்தில், குடிமக்களின் பேச்சுரிமை உள்ளிட்ட அனைத்து சுதந்திரங்களும் முடக்கப்பட்டதோடு, மத்திய அரசாங்கம் பத்திரிக்கைத் துறை மீது பல்வேறு கட்டுப்பாடுகளையும், தணிக்கையையும் திணித்தது. பத்திரிக்கைகளுக்கான விளம்பரங்கள் தடை செய்யப்பட்டதோடு, பல்வேறு பத்திரிக்கைகளை மூடுவதற்கான நோட்டீசும் வழங்கப்பட்டது. பத்திரிக்கையாளர்கள், வரி விதிப்புகளை எதிர்கொண்ட நிலையில்,</u>

சிறையிலும் அடைக்கப் பட்டனர். மத்திய அரசு அதிகார மையமாக செயல்பட்டதோடு, ஜெயபிரகாஷ் நாராயண், எல்.கே அத்வானி, அடல் பீகாரி வாஜ்பாய், மொரார்ஜி தேசாய், மது தண்டவதே உள்ளிட்ட எதிர்கட்சித் தலைவர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டனர். இத்தகைய நடவடிக்கைகள், பரவலான விமர்சனம் மற்றும் போராட்டங்களை சந்தித்தன. அவசர நிலை பிரகடனத்தை, இந்திய ஜனநாயகத்தின் மீதான ஒரு கருப்புப் புள்ளி என்று, ஆகாஷ்வாணியில், தமது மனதின் குரல் நிகழ்ச்சி ஒன்றின் உரையின் போதும், பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

-------------------------

***ராஜ்நாத் சிங்*** (8)

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில், உயர் நிலை இந்திய பிரதிநிதிகள் குழு ஒன்று, சீனாவில் நாளை துவங்க உள்ள, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்கிறது. பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள் மற்றும் உறுப்பு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடனான, மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு குறித்து, இந்த 2 நாள் கூட்டத்தில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர்கள், விவாதிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

-------------------------

***ஆபரேஷன் சிந்து*** (13)

ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் மூலம் இதுவரை 2 ஆயிரத்து 295 இந்தியர்கள் ஈரான் நாட்டில் இருந்து, இந்தியா அழைத்து

வரப்பட்டுள்ளதாக, வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். இன்று அதிகாலை, ஈரானின் மஷ்ஹாத் நகரில் இருந்து 292 இந்தியர்கள், சிறப்பு விமானம் மூலம் புதுடெல்லி வந்து சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், இஸ்ரேலில் இருந்த 165 இந்தியர்கள், ஜோர்டான் தலைநகர் அம்மானில் இருந்து, இந்திய விமானப் படையின் சி-17 விமானம் மூலம், இன்று காலை புதுடெல்லி வந்தடைந்தனர். இந்திய விமானப் படை, இந்திய நாட்டினர் மற்றும் நட்பு நாடுகளின் மக்களை, ஜோர்டான் மற்றும் எகிப்தில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றும் இயக்கத்தை துவக்கி உள்ளது. அதன் ஒருபகுதியாக, இஸ்ரேலில் சிக்கி உள்ள இலங்கை நாட்டினர் 17 பேர், நாளை அம்மான் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, புதுடெல்லி அழைத்து வரப்பட உள்ளனர்.

-------------------------

***பாலியல் விழிப்புணர்வு பொம்மை (18)***

புதுச்சேரி முத்தரையர் பாளையத்தில் உள்ள இளங்கோ அடிகள் அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்கள், பாலியல் விழிப்புணர்வு குறித்த பொம்மைகளை தயாரித்துள்ளனர். அதிகரித்து வரும் பாலியல் தொல்லை சம்பவங்கள் மற்றும் போக்சோ சட்டம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில், நல்ல தொடல், கெட்ட தொடல் குறித்த விழிப்புணர்வு பொம்மைகளை, அப்பள்ளியில் பயிலும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் உருவாக்கி உள்ளனர். ஜாரா எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த பேசும் பொம்மையை தொட்டால், தொடும் இடத்தை பொருத்து, அது GOOD TOUCH அல்லது BAD TOUCH என்று

தமிழ், ஆங்கிலம், மற்றும், ஹிந்தியில் கூறுகிறது. பொம்மையின் அந்தரங்கப் பகுதிகளை தொடும் போது, தொடாதே என மூன்று மொழிகளிலும் எச்சரிக்கை ஒலி எழுப்புகிறது. தங்களின் இயற்பியல் பாடத்தின் Project-ன் ஒருபகுதியாக, இந்த பொம்மைகளை இயற்பியல் ஆசிரியர் ஸ்ரீராம் வழிகாட்டுதலுடன் மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். இந்த பொம்மைகள் குறித்த செயல் விளக்க நிகழ்ச்சி, இன்று பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை பள்ளியின் துணை முதல்வர் கோகிலாம்பாள் துவக்கி வைத்தார். இந்த பொம்மையின் செயல்பாடு குறித்து மாணவி யோகேஷ்வரி கூறும் போது....

**(வாய்ஸ்)**

-------------------------

***ஓவியப் போட்டி*** (8)

போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஓவியப் போட்டி இன்று ஏனாமில் நடைபெற்றது. ஏனாம் காவல் துறையால், பிஎம். ஸ்ரீ. ஜவஹர் நவோதயா வித்யாலயாவில் இன்று காலை நடத்தப்பட்ட இந்த ஓவியப் போட்டியில், 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு, போதைப் பொருள் உபயோகத்தின் தீமைகள் குறித்தும், தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஓவியங்களை தீட்டினர். பள்ளி முதல்வர் திரு. ஷரத் சந்திரா, காவல் துணை ஆய்வாளர் திரு. புனித் ராஜ் உள்ளிட்டோர், மாணவர்களிடையே, போதைப் பொருள் தீமை குறித்து உரையாற்றினர்.

-------------------------

**வானிலை** (4)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும்,நாளையும், தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்காலின் ஒருசில பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-------------------------

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பயங்கரவாதத்தை இந்தியா ஒருபோதும் பொறுத்துக் கொள்ளாது என்று, ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு உணர்த்தி உள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெய்பிரகாஷ் நாராயண் போன்ற தலைவர்களின் வாழ்க்கையில் இருந்து இளைஞர்கள் ஊக்கம் பெற வேண்டும் என்று குடியரசுத் துணைத தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

எமர்ஜென்சி காலத்தை நினைவு கூறும் அரசியல் அமைப்பு படுகொலை தினம் நாளை அனுசரிக்கப் படுகிறது.

புதுச்சேரி இளங்கோ அடிகள் அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்கள், பாலியல் விழிப்புணர்வு குறித்த பொம்மைகளை தயாரித்துள்ளனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**